JMC, Thiruvadanai-STC No.20/2023
Judgment Dated: 18.03.2026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை

**சுருக்கு முறை விசாரணை வழக்கு எண். S.T.C.No. 20/2023**
CNR No. TNRM17-001578-2022

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | S.T.C.No.20/2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | திருவாடானை காவல் நிலையம் குற்ற எண். 416/2016 |
| **எதிரிகளின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | சின்னப்பொன்னு (A1) (Died) |
| 4. | க/பெ. | : | காளிமுத்தன் |
| 5. | தொழில் | : | விவசாயம் |
| 6. | முகவரி | : | மேலகற்காத்தக்குடி காலணி,<br>கற்காத்தக்குடி,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | : | வயது 66/2016 |
| | பெயர் | : | முருகேஸ்வரி (A2) |
| | க/பெ. | : | கருப்பையா |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | மேலகற்காத்தக்குடி காலணி,<br>கற்காத்தக்குடி,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 36/2016 |
| | பெயர் | | உமாமகேஸ்வரி (A3) (Died) |
| | க/பெ. | | காந்தி |
| | தொழில் | | விவசாயம் |
| | முகவரி | | மேலகற்காத்தக்குடி காலணி,<br>கற்காத்தக்குடி,<br>இராமநாதபுரம் மாவட்டம். |

| | | | |
|---|---|---|---|
| | வயது | | 24/2016 |
| | பெயர் | : | சுரேஷ் (A4) |
| | த/பெ. | : | காளிமுத்து |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | மேலகற்காத்தக்குடி காலணி,<br>கற்காத்தக்குடி,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | வயது 31/2016 |
| 8. | சம்பவ நாள் | : | 05.12.2026 ம் தேதி 18.30 மணி |
| 9. | புகார் தேதி | : | 08.12.2026 ம் தேதி 08.30 மணி |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | A1, A2, A3, A4– 08.12.2016 |
| 11. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | A1, A2, A3, A4 எதிரிகள் 08.12.2016 ம் தேதி காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார்கள். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 12.12.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 06.03.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | 1 வது எதிரி மீது பிரிவு 294(b) IPC–ன் கீழ், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி மீது பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 2 வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி மீது பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 15.12.2025<br>குறுக்கு விசாரணை – –இல்லை–<br>அ.சா.2 – முதல் விசாரணை – 15.12.2025<br>குறுக்கு விசாரணை – –இல்லை–<br>அ.சா.3 – முதல் விசாரணை – 23.02.2026<br>குறுக்கு விசாரணை – –இல்லை– |

| | | | |
|---|---|---|---|
| | | | அ.சா.4 – முதல் விசாரணை – 23.02.2026<br>குறுக்கு விசாரணை – 23.02.2026 |
| 18. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 06.03.2026 |
| 19. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின்படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.இளங்கோ |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திரு.N.முகமது ஜிப்ரி |
| 23 | எதிரிகளின் கூற்று | | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள் |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 18.03.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 18.03.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, 1 மற்றும் 3 வது எதிரிகள் இறந்துபோய்விட்டபடியால் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அபேட் ஆகிவிட்டது. 2 வது எதிரி பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 2, 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 2, 4 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 19.01.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 06.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது,

அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 2, 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.முகமது ஜிப்ரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

1. <u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:–</u>

வழக்கின் வாதியும் எதிரிகளும் மேலகற்காத்தக்குடி கிராமத்தை சேர்ந்த உடன் பிறந்த அண்ணன், தம்பி உறவினர்கள் ஆவார்கள். இவர்களுக்கு கற்காத்தக்குடி, மேலகுடியிருப்பு, காலனிக்கு தெற்கே உள்ள பூர்வீக இடத்தில் உள்ள காட்டுகருவேல் விறகு வெட்டுவது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. 05.12.2016 ம் தேதி மாலை 18.00 மணிக்கு வாதியும் வாதியின் மனைவி சாரதா, மகள் அன்புச்செல்வி ஆகியோர்கள் அவர்கள் வீட்டில் இருந்து வந்தபோது 1 முதல் 3 எதிரிகள் வாதியின் வீட்டு முன்பு வந்து நின்று கொண்டு 1 மற்றும் 2 வது எதிரிகள் வாதியையும் வாதியின் வகையறாக்களையும் பார்த்து ஏன்டா தேவிடியா பயல்களா என்று அசிங்கமாக பேசியும் வாதியை பார்த்து உன் மனைவி ஒரு தேவடியா முண்டை என்று கீழ்தரமாக பேசிய போது 2 வது சாட்சி அன்புச்செல்வி ஏன் எங்களை அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்ட போது 3 வது எதிரியானவர் கையில் வைத்திருந்த காட்டு கருவேல கம்பால் வாதியின் மகளான 2 வது சாட்சியின் வலது பக்க தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியும் அப்போது வாதியானவர் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1 வது எதிரியானவர் தன் கையில் வைத்திருந்த கயிற்றால் வாதியின் முதுகில் அடித்து ஊமைக்காயத்தை உண்டு பண்ணி உள்ளார். மேலும் 2 வது எதிரியானவர் வாதியை கையால் அடித்து கீழே தள்ளி சிராய்ப்பு காயத்தையும் ஏற்படுத்தியும் வாதியின் மகளான 2 வது சாட்சிக்கு 2 வது எதிரியானவர் சாதாரண காயத்தை உண்டு பன்னியும் அதன் பிறகு 06.12.2016 ம் தேதி காலையில் வாதியானவர் மட்டும் வீட்டில் இருந்து வந்த போது 4 வது எதிரியானவர் வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கதவை உடைத்து உள்ளே சென்று டிவி, ஸ்டான்டு, கேஸ் அடுப்பு, வயர் கட்டில் ஆகியவைகளை உடைத்து சேதப்படுத்திய குற்றம் புரிந்ததாக இவ்வழக்கின் 1 வது எதிரி

மீது பிரிவு 294(b) IPC–ன் கீழ், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி மீது பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் திருவாடானை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் 3 வது எதிரி, எதிரி சம்மன் சார்பு செய்யப்படுவதற்கு முன்பே இறந்துபோய்விட்டபடியாலும், 1 வது எதிரி பிரிவு 207 Cr.P.C–ன் கீழ் நகல்கள் கொடுப்பதற்கு முன்பே இறந்துபோய்விட்டபடியாலும், 1, 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அபேட் ஆகிவிட்ட நிலையில் இவ்வழக்கு 2, 4 எதிரிகளை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

3. 2 மற்றும் 4 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 2 மற்றும் 4 எதிரிகளுக்கு பிரிவு 207 Cr.P.C–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. 2 மற்றும் 4 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, 2 வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி மீது பிரிவுகள் 448, 427 IPC–ன் பேரிலான குற்றங்கள் பற்றி வினவ 2 மற்றும் 4 வது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. <u>**அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம் : –**</u>

வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ம், எதிரிகளும் மேலகற்காத்தக்குடி கிராமத்தை சேர்ந்த உடன் பிறந்த அண்ணன், தம்பி உறவினர்கள் ஆவார்கள். இவர்களுக்கு கற்காத்தக்குடி, மேலகுடியிருப்பு, காலனிக்கு தெற்கே உள்ள பூர்வீக இடத்தில் உள்ள காட்டுகருவேல் விறகு வெட்டுவது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது.

05.12.2016 ம் தேதி மாலை 18.00 மணிக்கு வாதியும் அ.சா.1 ன் மனைவி சாரதா, மகள் அன்புச்செல்வி ஆகியோர்கள் அவர்கள் வீட்டில் இருந்து வந்தபோது 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1 ன் வீட்டு முன்பு வந்து நின்று கொண்டு 1 மற்றும் 2 வது எதிரிகள் அ.சா.1 ஐயும் அவரது வகையறாக்களையும் பார்த்து ஏன்டா தேவிடியா பயல்களா என்று அசிங்கமாக பேசியும் அ.சா.1 ஐ பார்த்து உன் மனைவி ஒரு தேவடியா முண்டை என்று கீழ்தரமாக பேசிய போது 2 வது சாட்சி அன்புச்செல்வி ஏன் எங்களை அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்ட போது 3 வது எதிரியானவர் கையில் வைத்திருந்த காட்டு கருவேல கம்பால் அ.சா.2 ன் வலது பக்க தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியும் அப்போது அ.சா.1 ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1 வது எதிரியானவர் தன் கையில் வைத்திருந்த கயிற்றால் வாதியின் முதுகில் அடித்து ஊமைக்காயத்தை உண்டு பண்ணி உள்ளார். மேலும் 2 வது எதிரியானவர் அ.சா.1 ஐ கையால் அடித்து கீழே தள்ளி சிராய்ப்பு காயத்தையும் ஏற்படுத்தியும் அ.சா.2 ற்கு 2 வது எதிரியானவர் சாதாரண காயத்தை உண்டு பன்னியும் அதன் பிறகு 06.12.2016 ம் தேதி காலையில் அ.சா.1 மட்டும் வீட்டில் இருந்து வந்த போது 4 வது எதிரியானவர் அ.சா.1 ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கதவை உடைத்து உள்ளே சென்று டிவி, ஸ்டான்டு, கேஸ் அடுப்பு, வயர் கட்டில் ஆகியவைகளை உடைத்து சேதப்படுத்திய குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதேயாகும்.

6(2) அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை என்றும் தனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் தனது வீட்டின் அருகே வைத்து லேசாக வாய் தகராறு ஏற்பட்டதாகவும், அதனால் தாங்கள் அனைவரும் காவல்நிலையம் சென்று அங்கு பேசி சமசரமாக முடித்துக் கொண்டதாகவும் காவல்நிலையம் சென்றபோது போலிசார் தன்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றதாகவும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்றும் போலிசார் எதற்காக கையொப்பம் கேட்டனர் என்று தனக்கு தெரியாது என்றும் தனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் ஏற்பட்டது லேசான வாய் தகராறு தான் என்றும் தனக்கு எதிரிகள் தாக்கி காயம் எதுவும்

ஏற்படவில்லை என்றும் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவும் இல்லை என்றும் வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

6(3) அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை, தான் தனது தந்தை வீட்டில் இருந்தபோது தனது தந்தைக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் வீட்டின் அருகே வைத்து லேசாக வாய் தகராறு ஏற்பட்டதாகவும், அதனால் தாங்கள் அனைவரும் காவல்நிலையம் சென்று அங்கு பேசி சமரசமாக முடித்துக் கொண்டோம் என்றும் தனது தந்தைக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் லேசான வாய் தகராறு ஏற்பட்டது என்றும் தான் தனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும் மேலும் தனக்கு எதிரிகள் தாக்கி காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவும் இல்லை என்றும் வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

6(4) அ.சா.3 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் இடம் பெற்றுள்ள அ.சா.ஆ.2 முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அந்த கையெழுத்தை எதற்காக எப்போது போட்டு கொடுத்தேன் என்று நினைவில் இல்லை என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

6(5) அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 08.12.2016ம் தேதி காலை 8.30 மணியளவில் திருவாடானை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருக்கும் போது திருவாடானை காவல் நிலைய மனு ரசீது எண் 286/2016ஐ பார்வையிட்டு அ.சா.1 குமரன் என்பவர் அளித்த அ.சா.ஆ.3 புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 416/2016, பிரிவுகள் 448, 294(b), 323, 427, 506(i) IPC ஆக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்

6(6) பின்னர் வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துகொண்ட சார்பு ஆய்வாளர் அன்றையதினமே காலை 9.30 மணியளவில் சம்பவயிடம் சென்று அ.சா.3 ராஜா மற்றும் சாட்சி கருப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்துள்ளார்

6(7) பின்னர் வழக்கின் புகார்தாரரான அ.சா.1 குமரன், அ.சா.2 அன்புசெல்வி, அ.சா.3 ராஜா மற்றும் சாட்சிகள் சாரதா, சேகர், அழகம்மாள், கருபபையா மற்றும் மனு ரசீது வழங்கிய சிறப்பு சார்பு ஆயவாளர் முத்துவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும் அதன்பிறகு காயம்பட்ட நபரான அ.சா.2 அன்புசெல்விக்கு மருத்துவ சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதாக கண்ஈ அ.சா.2 ன் காயச்சான்றிதழான அ.சா.ஆ.7 ஐ பெற்றுள்ளார். பின் வழக்கின் எதிரிகளை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்

6(8) பின் வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கின் சட்டப்பிரிவுகளை 448, 294(b), 323, 427, 506(i) IPC–லிருந்து பிரிவுகள் 448, 294(b), 323, 427 IPC ஆக மாற்றம் செய்து அந்த அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துளளார்.

6(9) பின் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 1வது எதிரி மீது பிரிவு 294(b) IPC–ன் கீழ், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி மீது பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் திருவாடானை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து 2 மற்றும் 4 எதிரிகளுக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து 2 மற்றும் 4

எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவிய போது 2 மற்றும் 4 எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் 2 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்தார்கள். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 2 வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4 வது எதிரி மீது பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

**<u>தீர்வு</u>**

9. வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ம், எதிரிகளும் மேலகற்காத்தக்குடி கிராமத்தை சேர்ந்த உடன் பிறந்த அண்ணன், தம்பி உறவினர்கள் ஆவார்கள். இவர்களுக்கு கற்காத்தக்குடி, மேலகுடியிருப்பு, காலனிக்கு தெற்கே உள்ள பூர்வீக இடத்தில் உள்ள காட்டுகருவேல் விறகு வெட்டுவது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. 05.12.2016 ம் தேதி மாலை 18.00 மணிக்கு வாதியும் அ.சா.1 ன் மனைவி சாரதா, மகள் அன்புச்செல்வி ஆகியோர்கள் அவர்கள் வீட்டில் இருந்து வந்தபோது 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1 ன் வீட்டு முன்பு வந்து நின்று கொண்டு 1 மற்றும் 2 வது எதிரிகள் அ.சா.1 ஐயும் அவரது வகையறாக்களையும் பார்த்து ஏன்டா தேவிடியா பயல்களா என்று அசிங்கமாக பேசியும் அ.சா.1 ஐ பார்த்து உன் மனைவி ஒரு தேவடியா முண்டை என்று கீழ்தரமாக பேசிய போது 2 வது சாட்சி அன்புச்செல்வி ஏன் எங்களை அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்ட போது 3 வது எதிரியானவர் கையில் வைத்திருந்த காட்டு கருவேல கம்பால் அ.சா.2 ன் வலது பக்க தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியும் அப்போது அ.சா.1 ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1 வது எதிரியானவர் தன் கையில் வைத்திருந்த கயிற்றால் வாதியின் முதுகில் அடித்து ஊமைக்காயத்தை உண்டு பண்ணி உள்ளார். மேலும் 2 வது எதிரியானவர் அ.சா.1 ஐ கையால் அடித்து கீழே தள்ளி சிராய்ப்பு காயத்தையும் ஏற்படுத்தியும் அ.சா.2 ற்கு 2 வது

எதிரியானவர் சாதாரண காயத்தை உண்டு பன்னியும் அதன் பிறகு 06.12.2016 ம் தேதி காலையில் அ.சா.1 மட்டும் வீட்டில் இருந்து வந்த போது 4 வது எதிரியானவர் அ.சா.1 ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கதவை உடைத்து உள்ளே சென்று டிவி, ஸ்டான்டு, கேஸ் அடுப்பு, வயர் கட்டில் ஆகியவைகளை உடைத்து சேதப்படுத்திய குற்றம் புரிந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், வழக்கின் புகார்தாரரான அ.சா.1 எதிரிகள் தனது உறவினர்கள் தான் என்றும் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை என்றும் தனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் தனது வீட்டின் அருகே வைத்து லேசாக வாய் தகராறு ஏற்பட்டது என்றும் அதனால் தாங்கள் அனைவரும் காவல்நிலையம் சென்று அங்கு பேசி சமசரமாக முடித்துக் கொண்டோம் என்றும் காவல் நிலையம் சென்றபோது போலிசார் தன்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றனர் என்றும் போலிசார் எதற்காக கையொப்பம் கேட்டனர் என்று தனக்கு தெரியாது என்றும் தனக்கு எதிரிகள் தாக்கி காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவும் இல்லை என்றும் வழக்கு குறித்து வேறு எதுவூம் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்திருப்பது அரசு தரப்பு வழக்கை முற்றிலும் பாதிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

10. மேலும் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை என்றும் தான் தனது தந்தை வீட்டில் இருந்தபோது தனது தந்தைக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் வீட்டின் அருகே வைத்து லேசாக வாய் தகராறு ஏற்பட்டது என்றும் அதனால் தாங்கள் அனைவரும் காவல்நிலையம் சென்று அங்கு பேசி சமரசமாக முடித்துக் கொண்டோம் என்றும் தனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும் மேலும் தனக்கு எதிரிகள் தாக்கி காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவும் இல்லை என்றும் வழக்கு குறித்து தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார்

தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்திருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக அமையவில்லை.

11. மேலும் பார்வை மகஜர் சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.3, தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் இடம் பெற்றுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அந்த கையெழுத்தை எதற்காக எப்போது போட்டு கொடுத்தேன் என்று நினைவில் இல்லை என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்திருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு உதவக்கூடியதாக அமையவில்லை.

12. மேலும் இவ்வழக்கின் புகார்மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து, 2 மற்றும் 4 எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து அ.சா.4 சாட்சியம் அளித்துள்ள போதிலும், 2 மற்றும் 4 எதிரிகளின் குற்றச்செயல்களை இணைக்கக்கூடிய வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் ஏதும் அமையாத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச் சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை 2 மற்றும் 4 எதிரிகளுக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. எனவே இறுதியாக 1 மற்றும் 3வது எதிரிகள் இறந்துபோய்விட்டபடியால் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அபேட் ஆகிவிட்டது. 2வது எதிரி பிரிவுகள் 294(b), 323 IPC–ன் கீழ், 4வது எதிரி பிரிவுகள் 448, 427 IPC–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 2, 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 2, 4 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

14. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

JMC, Thiruvadanai-STC No.20/2023
Judgment Dated: 18.03.2026

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.18 15:56:57 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

அரசு தரப்பு சாட்சிகள் :—

1. அ.சா.1 திரு.குமரன்
2. அ.சா.2 திருமதி.அன்புச்செல்வி
3. அ.சா.3 திரு.ராஜா
3. அ.சா.4 திருமதி.ரேவதி (தலைமைக் காவலர்)

அரசு தரப்பு சான்றாவணங்கள் :—

1. அ.சா.ஆ.1 06.12.2016 புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 ன் கையெழுத்து
2. அ.சா.ஆ.2 08.12.2016 பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 ன் முதலாவது கையெழுத்து
3. அ.சா.ஆ.3 06.12.2016 புகார்வாக்குமூலம்
4. அ.சா.ஆ.4 08.12.2016 முதல் தகவல் அறிக்கை
5. அ.சா.ஆ.5 08.12.2016 பார்வை மகஜர்
6. அ.சா.ஆ.6 08.12.2016 மாதிரி வரைபடம்
7. அ.சா.ஆ.7 05.12.2016 அ.சா.2 ன் காயச்சான்றிதழ்

அரசு தரப்பு சான்று பொருட்கள் :—

—— இல்லை ——

2 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள்:—

——இல்லை——

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.18 15:57:05 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :-

1. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது 2 வது மற்றும் 4 வது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

--உண்மை நகல்--

ANTONY RISHAN DEV

Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.18 15:57:16 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.